541

ARYA DHARMAM — REGD. No. M. 2913

TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	வியாழந்தோறும் வெளியாகும்	விளம்பர விகிதம்.
[தபால் சிலவுள்பட]	ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.	ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
ஜீவிய சந்தா ... ரூ. 50	स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।	அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3	गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥	ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
ஆறுமாத சந்தா ... ரூ. 1½		இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை அணா 8
தனிப்பிரதி ஓரணா		நீண்டகால விளம்பரங்களுக்கு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்		தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-வரு பங்குனி-மீ 22உ 1940வரு ஏப்ரல்மீ 4உ. | லு-14

இந்தியா மந்திரிஸபை மெம்பர்

ஸ்ரீமான் ரங்கநாதன் நியமனம்.

ஸர், பன்னீர் செல்வத்தின் மரணத்தால் காலியாயிருந்த இந்தியா மந்திரிஸபை மெம்பர் பதவிக்கு சென்னை ஸர்வகலாசாலை உப அத்யக்ஷரான ஸ்ரீமான் எஸ். இ. ரங்கநாதன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இந்தியக்கிறிஸ்தவ வகுப்பைச் சேர்ந்தவர்.

ஈரோடு நாயகரும் வேண்டுகிறார்.

இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனியாக இடம் ஒதுக்கிக்கொடுக்கவேண்டு மென்று ஜனாப்ஜின்னா சொல்லிய பகற்கனவுப் பேச்சைப்பற்றி தேசத்தில் அர்த்தமற்ற விவாதம் நடக்கிறது. இதற்குள். ஈ. வி. ஆர் நாயகரும் ஜின்னாவை ஆதரித்துப் பேச முன்வந்திருக்கிறார் முஸ்லீம்களுக்கு ஏற்படப்போவது போல், தமிழர்களுக்கென்று "திராவிடராஜ்யம், ஒன்றை தனியாகஸ்தாபித்து விடவேண்டு மென்று அவர் விரும்புகிறார்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையின் விநோதப் போக்கு " பீகம் ஸீதா "

ஸ்ரீ ஸவர்க்கார் கண்டனம்

சென்னையில் ஸ்ரீயுத ஸவர்க்கார் சிவாஜி பிறந்த தின விழாவை முன்னிட்டு ஓர் பொதுக்கூட்டத்தில் வெகு ரஸமாகப் பேசினார். அவர் கூறிப்பிட்ட விஷயமாவது:—

"தர்ம ராஜ்யத்தை ஸ்தாபிப்பது தான் சிவாஜி இயக்கத்தின் முக்ய நோக்கம். தேசீய சரித்திரம் எழுதுவதென்ற முட்டாள்தனமான வேலை இப்போது நடைபெற்று வருகிறது.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்பதற்காகவே இப்போது தேச சரித்திரம் கற்பித்து எழுதப்படுகிறது.

வார்தா திட்டப்படி கீழ் வகுப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாடப் புஸ்தகங்களில் ஔரங்கஸீப்பையும், அக்பரையும் பற்றியே பாடங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சிவாஜியைப்பற்றியும் பிரதாப் சிங்கைப்பற்றியும் பேச்சே கிடையாது.

அவர்கள் எழுதியிருக்கும் புஸ்தகத்தில் ஸீதா தேவியை "பீகம் ஸீதா" என்றும், ஸீதா கல்யாணத்தை "ஸீதா மஜ்லீஸ்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நீங்கள் கூட இனி வேண்டுமானால் "நூர்ஜஹான் தேவி" என்று சொல்லலாம் போலும்? இதுவா ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி? இத்தகைய ஒற்றுமையை முஸ்லீம்களும் விரும்ப மாட்டார்கள்."

காந்திஜீ முஸ்லீம் ஆக்ஷியை விரும்புகிறார்!

ஸ்ரீ ஸவர்க்காரின் ஆக்ஷேபம்

ஜின்னா, இந்தியாவை இரண்டாக்கிவிட வேண்டுமென்பதைப்பற்றி செய்து வரும் கிளர்ச்சிக்கு காந்திஜி பதில் கூறுகையில்

இந்தியாவில் மஹம்மதியர் ஆக்ஷி ஏற்பட்டால் அதில் திருப்தியுடன் நான் வாழ விரும்புகிறேன் மஹம்மதிய ஆக்ஷி ஏற்பட்டால் கூட அதுவும் இந்திய ராஜாங்கம் தானே?"

என்று சொன்னார். இதைக்கண்டித்து ஸ்ரீ ஸவர்க்கார் ஓர் தக்கபதில் கொடுத்திருக்கிறார். அதாவது:—

ஜனாப்ஜின்னா இந்தியர்தானே என்று கேட்கப்படுகிறது. தேசியநோக்கம் காரணமாக ஜனாப்ஜின்னாவின் ஆக்ஷியின்கீழ் வாழ்வதானால், மனிதஸமூஹம் முழுவதும் ஒன்றுதானேஎன்ற உணர்ச்சியை முன்னிட்டு ஏன் பிரிடிஷ் ஆக்ஷியிலேயே நாம் இருக்கக்கூடாது?

எதற்காக நாம் சுதேசியை ஆதரிக்க வேணும்? லங்காஷயரில் இருக்கும் தொழிலாளரும் மனிதர்கள்தானே? அவர்கள் பட்டினிகிடக்கலாமா? நாம் பட்டனிகிடந்தாலும் கிடப்போமே? அவர்கள் சாப்பிட்டு வாழட்டுமே? இதுபரோபகாமல்லவா?

சோலையப்பமுதலி வீதி முத்ராதிகாரி அறிவிப்பு

சென்ற 20—3—40 ஏகாதேசியன்று அக்ரஹார மஹாஜனங்கள் முத்திராதிகாரியிடம் பசுவின் நெய் சுமார் சேர் 2½ கொடுத்தார்கள். அதில் பகவத் பாதாளின் ஆக்ஞை பிரகாரம் ஷை அக்ரஹாரம் தேவாலயத்தில் பிரதி சுக்ரவாரம் நெய் தீபம் போட்டதுபோக பாக்கி நெய்மடத்தில் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது.

20—3—40 ஏகாதசி புதன்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ விசாலாக்ஷி ஸமேத ஸ்ரீவிஸ்வநாதஸ்வாமி தேவாலயத்திலிருந்த புல் செடி கொடிகளை ஷை அக்ரஹாரவாஸியும் கும்பகோணம் இண்டோகம்மர்ஷியல் பாங்கு குமாஸ்தாவுமான ஸ்ரீ ராஜாமணி அய்யர் என்கிற சாமிநாத அய்யர் எடுத்து சுத்தம் செய்தார்கள்

ஷை 20—3—40. ஏகாதசி விக்ரபாண்டியம் பிர்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்கள் ராத்ரி 7 மணிமுதல் 10 [illegible] யில் அக்ரூராகமனம் என்னும் சரித்திரத்தை உபன்யாஸித்தார்கள். சுமார் ஸ்திரி புருஷர்கள் 400 பேர்கள் விஜயமாயிருந்து சிரவணம் செய்தார்கள் அடுத்த 3—4—40 ஏகாதசியன்று பங்குனி-மீ 21உ புதன்கிழமை சாயந்திரம் 6½ மணி முதல் ஷை சோலயப்ப முதலியார் தெரு ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ அனந்தராம தீக்ஷதர்வர்கள் தம்பி சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ நாராயண தீக்ஷதர் அவர்களால் ஸ்ரீ வாமனாவதாரம் என்னும் சரித்திரத்தை உபந்யாஸிப்பார்கள். ந. கி.

திருச்சி தார்மிக வித்யா ஸங்கம்

24—3—40 ஞாயிற்றுக்கிழமை இரவு மணிக்கு திருச்சிக்கோட்டை, தண்ணீர் பந்தல் ஸ்டோரில் தார்மிக வித்யா ஸங்கத்தின் ஆதரவில் அம்மாளக்ரஹாரம் ப்ரம்மஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள் அவர் 'ஞானஸாதனம்' விஷயமாக மிக அருமையாக உபந்யஸித்தார்கள். சித்தசுத்திக்கு ஸத்கர்மா இன்றியமையாததென்றும், அந்த சித்தசுத்தி க்ரமேண விருத்தியடையும்பொழுது தத்வ விசாரம் செய்து நித்ய அநித்ய வஸ்துக்களை உணர்வதுடன். மானிட உடற்கூறை ஆராய்தல்மூலம் வைராக்யமடைவேண்டுமென்றும் ப்ரேமை, ஸ்நேகம், பக்தி என்ற மூன்றுவிதமாகத்தோன்றும் அன்பை ஈச்வரனிடத்திலேயே முழுதும் செலுத்தி ஹ்ருதயத்தை பகவதர்ப்பணம் செய்யவேண்டுமென்றும், இவ்வாறு மூன்று ப்ரகாரத்தினாலும் ஞானப்ராப்தி அனைவர்க்கும் ஸுலபமாகுமென்பதை உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கினார். ஸ்ரீமான் ராமச்சந்திரன் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிதாய் கலைந்தது.

ஒ-கி

ஆசாரம்

ஆசமன விதிகள்

(ஸ்ரீ. எஸ். வைத்தீச்வரய்யர் கல்கத்தா)

ஸ்தாவர ஜங்கமங்களெல்லாம் ஈச்வர ஸொத்து. அதாவது கடவுள் வியாபித்திராத ஸிருஷ்டி ஒன்றுமில்லை. சுயநலத்திற்காக நாம் எதை ஆச்ரயித்தாலும் நன்றியைக்காட்டும் அறிகுறியாக வணக்கத்துடனுன் ஈச்வர சிந்தனையுடனுன் ஆச்ரயித்தால் ஹிம்ஸை என்பது ஒட்டாது. (அஹிம்ஸையே தர்மம்) ஆகையால் சௌசத்திற்கு வேண்டிய மண், ஜலம், பல்குச்சி, இவை எடுக்கும்போழுது வணக்கமும் தியானமும் அவசியம். ஸ்நானம் செய்வதற்குமுன் நீரால் நாம் அடையும் ப்ரயோஜனங்களை எண்ணி வணங்கவேண்டும். நதியில் இறங்குமுன் கரையிலிருந்து தீர்த்தத்தை தலையில் தெளித்துக்கொள்ளவேண்டும். இதுவும் ஆசமனமும் சிறிது சூட்டை தணிக்கின்றன. காலையில் தூங்கி எழுந்தவுடனும், மலஜலம் கழித்தபிறகும், பல்தேய்த்தபிறகும், ஸ்நானம் செய்புமுன்னும் பிறகும், வஸ்திரம் தரித்தபிறகும்' கைகால்களைக் கழுவி ஆமசனம் செய்யவேண்டும். சிறிதாயுள்ள மழைத் துளிகளால் ஆறுகுளங்கள் நிரம்புவதுபோல அர்த்தமில்லாததுபோல் தோன்றும் சிறு கார்யங்களால் மனுஷ்யனுக்கு இன்றியமையாத சித்தசுத்தத்திற்கு வழி ஏற்படுகிறது. ஆசமனம் என்பது சிறிது நீரை மூன்றுதடவை உட்கொண்டு கண் மூக்கு, காது ஆகிய இந்திரிய த்வாரங்களையும் தலை, பாதம், ஹ்ருதயம் ஆகிய [illegible] ஸ்தானங்களையும் நாலு [illegible]ந்தவிரல்களால் தொடுவது. இது இந்திரியங்களை விளக்கி ஊக்கமளிக்கிறது. மூர்ச்சையைத் தெளிவிக்கச்செய்யும் உபாயத்தில் இது ஒரு சிறு பாகமென்றால் எல்லாரும் அறியக்கூடும். இம்மாதிரி மகம்மதியர்களும் செய்வதைப் பார்த்திருக்கலாம். காமக்ரோதங்கள் ஜனித்தபொழுதும், கொட்டாவி, தும்மல், கண், காது, மூக்கிலுள்ள மலங்களை எடுப்பது இவைகளின் பிறகும், நீர் முதல் அன்னம் வரையில் உட்கொள்ளும் மின்னும் பிறகும் சிகை கீழ் அவயவங்கள் கச்சம் இவைகளைத் தொட்டாலும் பாடங்கள் வைதீக கர்மங்கள் துவக்கத்திலும் முடிவிலும் சுத்தமாயிருந்து ஆசமனம் செய்யவேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாய் உட்கார்ந்து முழங்கால்களுக்குள் கைவைத்து பேசாமல் ஆசமனம் செய்யவேண்டும். தெற்கு மேற்கு முகமாய்ச் செய்தால் ஸ்நானம் செய்யவேண்டுமென்றிருப்பதாலும் அளவுக்குமேல் நீரைப்பருகினாலும் உறிஞ்சி சத்தமிட்டாலும் சுராபானமென்பதாலும் ஆசமனத்தின் ஆத்மசக்தி அறியலாகும் அனுபவத்தில் நன்மை விளங்கும்.

வெயிலில் உலர்த்தப்பட்ட வஸ்திரம் (sterilized) வியாதியற்றது. தினந்தோறும் வேறு வஸ்திரம் தரிக்க வேண்டும். சட்டை உடுப்புக்கள் ஒரு நாளைக்குமேல் உபயோகப்படுவதால் வியாதிக்குக் காரணமாகிறது. நம்முடைய அழுக்குடன் டிராம், பஸ், ரயில்வண்டி, நாற்காலி, கடிதம், பிறர்மேல் படுவது, எச்சல், துப்பல், முதலான அழுக்குகளும் சேருகின்றன ஆகையால் சட்டையோடு எப்பொழுது மிருப்பதும் ஆசமனமும் பயனற்றது. உதட்டின் மயிரில்லாத பாகத்தில் விரல் பட்டாலும் சுத்தம் செய்ய வேண்டும். ஆகையால் எச்சில் செய்வது கூடவே கூடாது. நதியிலோ வீதியிலோ சுத்தமான இடத்திலோ துப்பக் கூடாது. காரி உமிழ்வது கூடாது. வலது புறம் துப்பக்கூடாது. கைக்குட்டையில் மூக்குச்சிந்தி வைத்துக்கொள்ளக் கூடாது. இவைசுகாதாரம். இடுப்பு வஸ்திரத்தை கச்சமாக இருதுடையிலும் படாமல் தரிப்பது அவசியம். காம உணர்ச்சியை சிறிது தடுக்கும் உபாயமிது. இடுப்பில் கட்டிய வஸ்திரத்தை மேலுக்கும் மேல் வஸ்திரத்தை இடுப்பிலும் சிறிது நேரங்கூட மாற்றி உபயோகிக்கக்கூடாது. துர் நாற்றத்தால் தேஜஸ் குறையும்.

பயிர் செடிகளுக்கு உயிரிருப்பதோடு நம்மைப் போலவே உணர்ச்சிகளுமிருக்கின்றன வென்று ஸர். ஜே. ஸி. போஸ் நிரூபித்ததிலிருந்தாவது எல்லாரும் நம்பக்கூடும். வைத்யசாஸ்திரத்தினால் அவைகளுக்கு குணக்களிருப்பதும் அறியலாம். காய்கறி தானியங்கள் கொல்லாமல் கிடைப்பதில்லை. ஜீவஜந்துக்கள் கொல்லப்படும்பொழுது வருந்துவது சத்தத்தினாலும் பேச்சினாலும் தெரிகிறது. ஸ்தாவரங்களின் வருத்தம் தெரியவில்லை. ஹிம்ஸை சமமாகத் தானிருக்கிறது. இதனாலேயே "நோன்பென்பது கொன்றுதின்னாமை,, என்றார். காங்கிரஸின் அஹிம்ஸை பேச்சோடுசரி. காந்திஜீயின் அஹிம்ஸைஜங்கமங்களோடு நிற்கிறது. அதுவும் தன் மனோபாவத்தை ஒட்டியது. ஸநாதனிகள் ஸ்தாவரங்களிடங்கூட திரிகாரணங்களாலும் அஹிம்ஸை பாராட்டுகிறார்கள். மனோபாவத்திற்கு அடிமைப்படாமல் சாஸ்திரத்திற்கு அடிமைப்பட்டார்கள்.

நிழற் கூத்து,

(3-ம் காலத்தின் தொடர்ச்சி.)

நாம் செய்யவேண்டிய தென்ன?

படக்காட்சி சாலைக்குச் செல்வோர் சங்கம் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்படவேண்டும். படங்களில் காணப்படும் குறைகளை எடுத்து அரசாங்கத்தாருக்கும் பொது ஜனங்களுக்கும் விளக்கிக்காட்டவேண்டும் குறைகளுடன் தோன்றும் படங்களைக் காட்டப்பெறாமல் நிறுத்தக்கூடிய உபாயங்களை அரசாங்கத்தாரின் உதவியால் தேடவேண்டும். அப்படிச் செய்தால் படக்காட்சியின் மோசம் கொஞ்சமாவது குறையும்

அப்போதைக்கப்போது தோன்றும் படங்களின் குறைகளை அடுத்த இதழ்களில் விவரிப்போம்.

நாகூர்
ஸ்ரீ ராமநவமி உத்ஸவம்

நாளது விக்ரம ௵ சித்திரை-௴ 28௳ (10—5—40)அக்ஷய திருதியை முதல் (19—5—40)வரையில் ஸ்ரீ ராமச்சந்திர ஸ்வாமி அவதார ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவமும் வசந்த உத்ஸவமும் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவமும் பகவத் கிருபையை முன்னிட்டு நடத்துவதாய் நிச்சயித்திருப்பதால் ஷை உத்ஸவங்களுக்கும் இரவில் மகான்களான அநேகம் சாதுக்களால் செய்யப்படும் பகவத் பஜனைகளுக்கும் கீர்தன குணானுபவங்களுக்கும் பக்தகோடிகள் வந்திருந்து பரமாத்மாவை தரிசித்து புண்யத்தைக் கைகொள்ள வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்,

வீராஸாமி அய்யர்.

நிழற் கூத்து

[பரத்வாஜன் எழுதியது]

(முன் தொடர்ச்சி)

ப்ரதீகர்தானே !

இவ்வளவு சிரமப் பட்டும் பணம் விரயம் செய்தும் சென்று பார்க்கும் படங்களால் உண்மையான ப்ரயோஜனமும் உண்டா ? நாடகத்தில் நடிகர்களையும் அவர்களது சங்கீதத்தையும் நேரில் காண்பது போல் இது ஆகுமா ? படம் பிடிப்பவர்களுடைய சாதுர்யத்தினால் குரூபிகளை அழகாகவும், அழகானவர்களைக் குரூபமாகவும் பிடித்துக் காட்டுகிறார்கள். குரலும் அப்படியே. படத்தில் பாடப்படும் குரலை கொண்டு இன்னாருடைய தென்று கண்டு பிடிப்பது சாத்தியமா ? நாடகத்தில் காட்டப்படும் இயற்கையான வர்ணங்களை (நிறங்களை) இதில் காணக்கூடுமா ? பலவிதத்திலும் சவுகரியமற்றவைகளாகவே அவைகள் விளங்குகின்றன.

அதிலும் பெருத்த ஏமாற்றம் !

இத்தகைய படங்களைக் காட்டுவதிலும் அநேக ஏமாற்றங்கள் இருக்கின்றன. படங்கள் தயாரானதும் பெரிய நகரங்களில் தான் காட்டப் படுகின்றன. கொஞ்ச காலம் கழித்துதான் (அந்தப் படத்தின் மதிப்புப் போனதும்) சிறு டவுன்களுக்கு அந்தப் படங்கள் தருவிக்கப் படுகின்றன. அப்போது அவைகள் கத்தரிக்கப் பட்டும் பல விதமான கெடுதல்களை யடைந்தும் தோன்றுகின்றன. இதோடுமல்லாமல் படக்காட்சி இயந்திரத்தில் கோளாறும் ஏற்பட்டு விட்டால் இன்னும் வேடிக்கை தான்! படம் ஆடும்; குரல் மாறுபட்டு விகாரமாக விருக்கும் ; அப்போது ஜனங்கள் திரையில் எலெக்ட்ரிக் லைட் அடிப்பார்கள், "ஏய் மெதுவாகக் காட்டுடா படம் ஆடறதுடா ஸ்வுண்பாக்ஸ் சரியாக வில்லை குரல் அலற்றதுடா பாட்டு சரியாக கேட்கல்லே"! என்று பல விதமான சப்தங்களைப் போடுவார்கள். நான் ஒருதரம் 'பக்த குசேலா' வென்னும் படம் பார்க்கச்சென்றிருந்தேன். அதில் 'மாயனைமன்னுவடமதுரை மைய்ந்தனை' என்னும் பாட்டு பாடப்படும் சமயம் காட்டப் படவேயில்லை. பாட்டுப் புஸ்தகத்தில் மாத்திரம் அது கண்டிருந்தது. நாட்டுப் புறங்களில் காட்டப்படும் படக்காக்ஷிகளில் இம்மாதிரியும் அநேக மிருக்கின்றன.

ஆனால் சவுகரியம் யாருக்கு?

படக்காட்சிக்களைக்காட்டும் கொட்டகைக்காரர் களுக்கும் கூட சிலசமயங்களில் ஆபத்துதான் என்று சொன்னாலும் நடிகர்களுக்கு ஒருகாலமும் ஆபத்தே கிடையாது. சாதாரணமாக நாடகங்களில் தோன்றி நடிப்பவர்களிடத்து ஏதாவது நடிப்புத்திறம் குறைந்திருந்தாலும், அல்லது அவர்கள் யாரையாவது தூஷித்துக்காண்பித்தாலும் உடனே அனர்த்தம் விளைந்து போலீசார் பிரசன்னமாகக் கூடிய நிலைமை வந்து விடுவதுண்டு. நடிகர்கள் சொல்லாமலே புறப்பட்டுத் திருட்டுத்தனமாய் ஊரைவிட்டுப்போகக்கூடிய நிலைமை வந்து விடுவதுண்டு. ஆனால் திரையில் தோன்றும் நடிகர்களுக்கு அவ்விதபயமில்லை. அவர்களுடைய நிழலுக்குக்கிடைக்கும் வசைமாலையோடு சரிதான். இவ்விதசவுகரியம் ஒன்றே அவர்களுக்குப் போதுமானது இந்த சவுகரியத்தினாலேயே நடித்துக் காட்டலாம்.

(தொடர்ச்சி 2-வது காலம் பார்க்க.)

ஸ்ரீஜகத்குரு விஜயம்
நல்லூர்

மஹா ஜனங்களின் குதூஹலம்

பிரமாதி-ஸு பங்குனி-மீ 4-உ பானுவாரம் நமது ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீசங்கராசாரிய பகவத் பாதாள் காலை 8-மணிக்கு விஜயம் செய்தார். சனிக்கிழமை இரவு முழுவதும் ஜனங்கள் தூங்காமல் தெருக்களை சுத்தஞ் செய்து அலங்காரங்கள் செய்தும், மகரதோரணங்கள், வரவேற்பு வளைவுகள். அதிர்வேட்டுகள், வாத்யகோஷங்கள், எல்லாம் தயாரித்து காலை 6-மணி முதல் உள்ளூர், வெளியூர், ஜனங்கள் திரள்திரளாக கூடி 4-பர்லாங்கு வரையில் சென்று எதிர்கொண்டழைக்க, 10-மணி வரை காத்திருந்து, பரமாத்மாவைக் கண்டதும். ஜே! கோஷம் வானமளாவ எங்கும் கண்டிராத ஆனந்த காக்ஷியாயிருந்தது. ஜனங்கள் தன்னை மறந்து நம: பார்வதீ பதயே, ஹரஹர மஹாதேவ என்று கோஷித்து வீடுகள் தோறும் மரியாதை நடத்தி பகவானுக்கு பிக்ஷைக்கு ஏற்பாடு செய்திருந்த ஜாகையில் வாத்ய கோஷங்களுடனும், ஜயகோஷத்துடனும் பிரதேசத்தைக் கண்ட எந்த மக்களுக்குத் தான், தன்னை மறந்த பக்தி பரவசம் உண்டாகாது பிறகு ரிடையர்டு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யரும், ஸ்ரீ நாராயணஸாமி அய்யரும் சேர்ந்து பரமாசாரியாளுக்கு பிக்ஷாவந்தன பூர்வகமாக பிக்ஷை செய்து வைத்தார்கள். பக்தர்கள் பிரஸாதம் பெற்றார்கள். இரவு 6 முதல் 8 மணி வரை பாபநாசம் பிரதர்ஸ் திவ்ய ராமபஜனை ஸன்னிதானத்தில் நடந்தது. 10 முதல் 12மணி வரை ஸ்ரீ சங்கரகுருநாதர் ஸிம்மாசனத்திலமர்ந்து காக்ஷிதந்து ஓர் அரிய உபந்யாசஞ் செய்தார்கள். கபிஸ்தலம் எஸ்டேட் சுந்தரப்பெருமாள் கோயில் ஆர். கோவிந்தஸாமி மூப்பனாரவர்கள் தமுக்கு ஸாமான் காணிக்கையுடன் ஸ்வாமிகளை தர்சிக்க வந்தார். ஆசார்யார்களுடன் நீண்ட நேரம் தனியாக சம்பாஷணை புரிந்தார்கள். திரிபுரசுந்தரி ஸன்னிதானத்தில் ஸ்ரீ விசுவநாத பாகவதாரல் சத்கதாகாலக்ஷேபம் தக்க பக்கவாத்தியங்களுடன் நடத்தினார்

பாடசாலை பிரின்ஸிபால் கிருஷ்ண சாஸ்திரிகளுக்கும் இதர பண்டிதர்களுக்கும் வெகுமதி அளித்தார்கள். 6-உ செவ்வாய்க்கிழமை பட்டண ப்ரவேசம் செய்து எல்லா வீதிகளும் சுற்றி ஜாகையில் இறங்கிய பிறகு கிராமத்திலும் சுற்றியும் பெருத்த மழைபெய்தது. பெரியாவாள் அனுக்ரஹம் என்று எல்லோரும் அறிந்து கொண்டார்கள். திருவாலூர் யாத்ரை கிளம்பி போகும் வழியில் ரெங்கநாதபுரம் கிளியூர் முதலிய ஊர் ஜனங்களுக்கு தரிசனம் அளித்தார்கள். ஒவ்வொரு ஹரிஜனக்கூட்டத்திலும் ஸாவகாசமாய் எல்லோரும் தரிசிக்க ஸாவகாசம் அளித்தார்கள். மொத்தம் ஆயிரம் ஹரிஜனங்கள் ரோட்டில் கூடியது வெகு ஆச்சரியம். (ஒ. நி.)

காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
அருளிய நன்மொழிகள்
முதல் பாகம் ரூ. 1—8—0
இரண்டாம் பாகம் அணா 10.
கிடைக்குமிடம்.— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் வொர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

தமிழ் நாடு சனாதன மஹா நாடு
இராமேஸ்வரம்

26—3—40-ல் ஷை 1-வது மஹாநாடு இராமேஸ்வரத்தில் மிக்கச் சிறப்பாய் நடைபெற்றது மஹாநாட்டுத் தலைவர் திருநெல்வேலி அட்வகேட் ஸ்ரீ டி. ஆர். கணபதிராம அய்யர், மதுரை ஸ்ரீ ஆர். ஆனந்தராவ் திருநெல்வேலி ஸ்ரீமதி எஸ். ருக்மணியம்மாள் ஆகியோர் 26.உ காலை 6½-மணி ரயிலில் வந்து சேர்ந்தனர். வரவேற்புக் கமிட்டித் தலைவருமான ஸ்ரீ வி. பீமான்சங்கர் பட்டர் தமது சகாக்களுடன் பிளாட்பாரம் சென்று தலைவர்களை முறைப்படி வரவேற்று அவர்கள் ஊர்வலமாக அழைத்து சென்றனர். வழி நெடுக சனாதன தர்மம் நீடூழி வாழ வேண்டும் என்ற பொருள் கொண்ட பலசுலோகங்களை கோஷித்துக் கொண்டு சென்றனர். ஊர்வலம் கீழரத வீதி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீமடத்தில் வர்ணாச்ரமஸ்வராஜ்யஸங்கசேவாசதனகொடிஸ்தம்பத்தில் மகாநாட்டுத் தலைவா ஸ்ரீ டி. ஆர். கணபதிராமய்யர் அவர்கள் ஸநாதன கொடியேற்றுவிழாவை நடத்திவைத்தார்கள். கொடியின் மகத்வத்தையும் இனி விளக்கினார். அவர்களுக்கு ஷை சனாதனத்தின் சார்பாக சமஸ்கிருதத்தில் வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

மஹாநாடு சரியாக காலை 9 மணிக்கு ஆரம்பமாயிற்று மாகாணத்தின் பல பாகத்திலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனக் கடவுள் வாழ்த்துக்கு பின் வரவேற்புக் கமிட்டி தலைவர் ஸ்ரீமான் வி. பீமாசங்கரபட்டர் அனைவரையும் அன்புடன் வரவேற்று தலைவரும் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் செகரட்டரி ஷை ஸ்ரீவி. வெங்கட்ராமதீக்ஷதரால் வரவேற்பு பத்திரம் சம்ஸ்கிருதத்திலேயே வாசித்து அளிக்கப்பட்டது. உபசரணை கமிட்டி சேர்மன் ஷை வி. பீமாசங்கர பட்டர் கீழ்காணும் அறிய உபன்யாசம் செய்தார்கள்.

மஹாநாட்டுக்கு ஆசிகூறி வந்திருந்த தந்திகளையும் கடிதங்களையும் அவர் வாசித்தார். கும்பகோணம் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் சில யோஜனைகள் கூறி அனுப்பியிருந்த ஸ்ரீமுகமும் வாசிக்கப்பட்டது. மதுரை ஸ்ரீ ஆனந்தராவ் பிறகு ஸபையை ஆரம்பித்துவைத்து ஓர் பிரஸங்கம் செய்தார்.

பிறகு மஹாநாட்டுத் தலைவர் பேசினார். கவர்மெண்டார் ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்துசெய்யவேண்டிய அவச்யத்தை வற்புறுத்தினார். கிராமங்கள்தோறும் ஸநாதநதர்ம ஸபை ஏற்படுத்த வேண்டினார். மஹாநாட்டில் முக்கியமான பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஆலயப் பிரவேசச் சட்டத்தை ரத்து செய்யும்படியும், ராமேஸ்வரம் கோவிலில் ஆலய பிரவேசத்தைத் தடுத்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியும், அரசியல் நிர்ணய ஸபை ஏற்பட்டால் அதில் ஸநாதனிகளுக்கும் நியாயமான பிரதிநிதித்வம் அளிக்கும்படி ராஜப்பிரதிநிதியை வேண்டிக்கொண்டும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. தீர்மானங்களை ஆமோதித்தும் ஆதரித்தும் பலர் தீவ்ரமாகப் பேசினார். தலைவரின் முடிவுரைக்குப் பிறகு ஸ்ரீ கே. எஸ். சுப்ரமண்ய சாஸ்திரியாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு மஹாநாடு பூர்த்தியாகியது.

மஹாநாட்டுத் தலைவரான ஸ்ரீமான் கணபதிராமய்யர் அவர்களுக்கு ராமேச்வரம் யூனியன் போர்டாரால் ஒரு உபசார பத்திரம் அளிக்கப்பட்டது.

ஹிந்துமகாசபைக்கு பெரும்வெற்றி
காங்கிரஸுக்கு படுதோல்வி

டெல்லி முனிசிபல் எலெக்ஷன்

இந்தியாவில் தலைநகரமாகிய டெல்லியில் முனிஸிபல் எலெக்ஷன் 14 வார்டுகளில் நடை பெற்றது. டெல்லிமாகாண ஹிந்துஸபையார் தங்கள்ஸபை சார்பாக 10 அபேக்ஷகர்களை நியமித்திருந்தார்கள். காங்கிரஸ் வாதிகள் ஹிந்துஸபைக்குப் போட்டியாக நின்றார்கள். ஆயினும் 10 வார்டுகளில் ஹிந்து மஹாஸபையானது பெரும் வெற்றியடைந்தது.

சுயேச்சையாக நின்று வெற்றி பெற்ற இரண்டு ஹிந்துங்களும் பிறகு மஹாஸபையில் சேர்ந்து விட்டார்கள்.

ஒவ்வொரு வார்டுகளிலும் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் பெருத்த தோல்வியடைந்தனர் இப்போது ஹிந்துஸபை மெம்பர்கள் 14 பேர் டெல்லிமுனிஸிபல் ஸபையில் அங்கத்தினராக வந்திருக்கிறார்கள். இது டெல்லி சரித்திரத்திலே முதலாவதாக ஏற்பட்ட பெரியவெற்றியாகுமென மஹாஸபையார் நினைக்கிறார்கள்.

ஸ்திரீ ஜப்திசெய்யப்பட்டாள்.

சாக்கரி ஸம்ஸ்தான ஹிந்துக்களுக்கு பெரும் அநீதி

வடஇந்தியாவிலுள்ள மேற்படி ஸம்ஸ்தானத்தில் ஹிந்துக்களே 100க்கு 95வீதம் பெரும்பான்மையோர். முஸ்லீம்கள் வெகு சிறியதொகையினர். ஆயினும் அங்கு ஒரு முகம்மதியர் திவானாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் மகம்மதியர்களுக்கு சலுகைகாட்டியும் ஹிந்துக்களுக்கு தீங்கு செய்தும் பக்ஷபாதமாக ஆக்ஷிநடத்தும் அநியாயத்தை புனா மாராட்டா பத்திரிகைக்கு அதன் நிருபர் விவரமாகஎழுதியிருக்கிறார். ஹிந்துக்களுடைய மதஸம்பந்தமான உரிமைகள், பொதுபாத்யங்களுக்கு விரோதமாக பஜனைகோஷ்டிகள் மதக்கூட்டங்கள் ஆகியவைகள் பலாத்காரமாகத் தடியடிகொடுத்துப் போலீஸாரால் கலைக்கப்படுகின்றன. ஹிந்துகள்மீது செருப்புக்களும் உபயோகிக்கப்படுகின்றன. அநேக ஹிந்துத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ரவின்யூ கிஸ்திவஸூலில் ஹிந்து ஸ்திரீயை ஜப்தி செய்து ஏலம் கூறினார்களாம்.

எல்லா பெரிய உத்யோகங்களும் முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதுடன், அவர்களின் சம்பளமும் வேண்டுமென்றே இரட்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்தஅக்ரமங்களை எடுத்துக்காட்டி அகில இந்தியா ஹிந்து மஹாஸபை கார்யதரிசியான ஸ்ரீமான் ஜகன்னாத பிரஸாத வர்மா என்பவர் இந்தியா மந்திரி,ரெஸிடெண்ட் முதலிய பலருக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்.

திருவாரூர்

ஆசார்யாள் விஜயம்

ஸ்ரீ காமகோடிபீடம் ஸ்ரீ ஜகத்குருசங்கராச்சார்ய ஸ்வாமிகள் ருத்திர பாதஸ்நானத்தன்று காலை விஜயம்செய்து அன்று மாத்யானிக சிம்மலக்னஸ்நானம் விதிப்படிமுடித்து பூஜைகள் நிறைவேற்றி, மறுநாள் நகர ஆஸ்திகர்கள்யாவரையும் சிஷ்யர்கள்மூலம் வரவழைத்து ஸ்ரீ மடத்தின் உத்தேசவேலைகளும் அதற்கு அதன் சிஷ்யர்கள் செய்யவேண்டிய உதவிகளும் என்னும் விஷயமாய் உபன்யசித்தார்கள்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹு பங்குனி-மீ 22உ

அஹிம்ஸையால் பயனுண்டா?

பாரததேசத்தின் தற்கால நிலைமையில் ஹிந்துக்களின், ராஜீய, மத, ஸமூஹ உரிமைகளையும் க்ஷேமங்களையும் பாதுகாத்துக்கொள்ள ஓர் உயர்ந்த உபாயம் அவச்யம் தேவையாயிருப்பதை யாவரும் உணர்ந்திருக்கக் கூடும். இந்த உபாயவிஷயம் தேசத்தில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டு உருவான ஆலோசனையை கண்டுப்பிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. இதில் தேசம் முழுவதற்கும் பிரதிநிதித்வ பாத்யம் கொண்டாடிப் பேசிவரும் ஸ்ரீமான் காந்தி அஹிம்ஸையை ஓர் தக்க உபாயமாக உபதேசித்து வருகிறார். அதில் அவருக்குப் பூர்ண நம்பிக்கை இருந்து வருகிறது. ஆயினும் அஹிம்ஸை ஓர் ஸாதனமாகுமா என்பதைப் பற்றி பலத்த அபிப்பிராயபேதம் தோன்றியிருக்கிறது. ஜனங்களின் பெரும்பாலோரானவர்களும் விவேகிகளான பல தலைவர்களும் அஹிம்ஸையை எதிர்க்க முன்வந்திருக்கிறார்கள். அஹிம்ஸையானது ஹிந்து ஸமூஹத்தை பௌருஷமற்றதாக்கி பயங்கொள்ளியாகச் செய்து வருகிறது. அதனால் ஹிந்துக்களின் நிலைமை பலவிதத்திலும் கேவலப்பட்டு, அன்னியர்களின் சக்தி வலுவடைந்து வருவது பிரத்யக்ஷமாயிருக்கிறது. ஸொத்து, ஸ்வதந்திரங்களையும், வீடுவாசல்களையும், பெண்டாட்டி பிள்ளைகளையும், உயிரையும், மத, ஸமூஹ உரிமையையும் கூட எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்ற நிலைமையில் இன்று ஹிந்து ஸமூஹம் தத்தளிக்கிறது. ஹிந்துக்கள் தங்களது ஸொந்ததேசத்திலேயே இப்படி நிர்கதியான நிலைமையில் காலந்தள்ளும்படி ஏற்பட்டால் இதை எவ்வளவுகாலம் அந்த ஸமூஹம் ஸஹித்திருக்கமுடியும்? ஹிந்துக்களுக்கு எதிரிகளால் ஒவ்வொருக்ஷணமும் ஏற்பட்டுவரும் கோரமான, உயிர், பொருள் சேதவிவரங்களைப்பற்றி நாம் பிரதிதினமும் பயங்கரமான ஸமாசாரங்களை அறிந்துவரவில்லையா? இந்தப்பெரிய ஆபத்திலிருந்து ஹிந்துஸமூஹம் தப்பிப்பிழைக்க வேண்டுமானால் உடனே அஹிம்ஸைப்போன்ற அர்த்தமற்ற முறைகளில் தடுமாறிக்கொண்டிருக்க உட்பட முடியாது உயர்ந்த க்ஷாத்ர தர்மமே தக்கமருந்தாகும்.

பிராசீனகாலங்களில் தேசமானது அமைதியாக இருந்ததற்கு க்ஷத்திரிய தர்மம் வியாபித்து நின்றதே காரணமாகும். அப்போதுபூர்ண அஹிம்ஸை என்பதை எந்த க்ஷத்திரியனும் ஏற்றுக்கொள்ளவில்லை. அது ராஜதர்மமாகவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் பௌத்தர் ஆதிக்யம் காரணமாக அர்த்தமற்ற அஹிம்ஸைக்குச்சிறிது ஆதிக்யம்ஏற்படலாயிற்று ஆயினும் அதனால் தேசம் பாழாக ஆரம்பித்தது. உடனே தீர்க்கதர்சிகளான பெரியோர்கள் முன்வந்து அஹிம்ஸையானது வரையறைக்குள்பட்டதே யன்றி எப்போதும் எல்லாவிஷயத்திலும் ஆசரிக்கக்கூடியதல்லவென்ற சாஸ்திரீயமான ஆழ்ந்த தத்வத்தைப் போதித்து தேசத்தையும் மதத்தையும் காப்பாற்றி வைத்தார்கள்.

இப்போது மீண்டும் பௌத்தக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்துடன் காந்திஜி பூர்ண அஹிம்ஸையை ஹிந்துக்களிடையில் புகுத்தப் புறப்பட்டிருக்கிறார். இதனால் நம் ஸமூஹம் கீழ்ப்பட்ட நிலைமைக்குப் போய்கொண்டிருக்கிறது.

மேலும் ஹிந்துஸ்தானத்தின் சொந்தக்காரர்களாகிய நமக்கு இரண்டு எதிரிகள் இருந்து வருகிறார்கள். ஒருவர் வெள்ளைக்காரர் மற்றொருவர் மஹம்மதியர். இவ்விருவரும் நம் தேசத்தில் குடியேறியுள்ளவர்கள். மிகச் சிறுபான்மையினர். அப்படியிருந்தும் ஹிந்துக்களை அவர்கள் அடக்கியாள விரும்புகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களிடம் உள்ள பலமேயாகும். க்ஷத்திரிய பலத்தைக்கொண்டு அவர்கள் நம்மீது ஆதிக்யம் செலுத்துகையில் அதைத் தவிர்க்க வேண்டுமானால் நாம் அஹிம்ஸையைப் பேசிக்கொண்டிருப்பது பலிக்குமா? எதிரிகள் நம்மை மதிப்பார்களா? நமது கார்யம்தான் ஸித்திக்குமா? வெள்ளைக்காரர்களுக்கு ஸேனை, ஆயுதம் யுத்தம் போன்ற ஹிம்ஸாமுறைகள் இயற்கையாக அமைந்தவை. எந்தக்கார்யத்தையும் ஸாதித்துக்கொள்ள அவர்கள் மேற்படி ஸாதனங்களையே நம்பியிருப்பவர்கள். இந்தியாவிலும் அந்தக் கொள்கைப்படியே நம்மை ஆண்டு வருகிறார்கள். இதுவே க்ஷத்திரிய முறையாகும்.

மஹம்மதியர்களுக்கும் அஹிம்ஸையில் நம்பிக்கைகிடையாது. அந்த ஜாதியாரும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பலத்தையும், பலாத்காரத்தையும் கொண்டே தங்கள் விருப்பத்தை ஸாதிக்க முயல்பவர்கள், ஆகவே ஹிந்து தேசத்தில் உள்ள ஹிந்து விரோதிகள் பலாத்காரத்தைக் காட்டி நம்மைத் துன்புறுத்தி வருகையில் நாம் மட்டும் அஹிம்ஸைக் கொள்கையைப் பேசிக்கொண்டிருப்பது நம்மையே நாம் அழித்துக்கொள்வதாகு மென்று ஸ்ரீமான் ஸவர்க்காரும், மற்ற ஹிந்து ஸபைத்தலைவர்களும் நினைப்பது நியாயமாகவே இருக்கிறது. ஆதலால் இப்போது அவச்யமாக வேண்டிய க்ஷத்திரிய உணர்ச்சியும், க்ஷத்திரிய வீர்யமும் தான் நம்மை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கக் கூடிய உயர்ந்த உபாயமென்று தெளிவாகிறது. ஹிந்து மஹாஸபையின் கொள்கையும் தலைவர்களின் வீரமுழக்கங்களும் க்ஷத்திரிய வீர்யம் நிறைந்தவைகளாய் இருப்பதுபற்றி அவைகள் தற்போது ஹிந்துஸ்தானத்தையும் அதன் உயர்ந்த தர்மங்களையும், ஹிந்துக்களின், உயிர் உடைமைகளையும் ரக்ஷிக்கவல்லமையுள்ளவை என்ற எண்ணம் தேசம் முழுவதும் பரவ ஆரம்பித்துவிட்டது, இதன்மூலம் பூர்ண அஹிம்ஸை என்ற பயங்கொள்ளிமுறையும் தானாகவேமெலிந்து மூலையில் பதுங்கிக்கிடக்கும் கதிக்குவந்திருப்பதை தேசஜனங்கள் கவனிப்பார்கள்.

பிராம்மணர்களும் ராணுவசேவையும்

ஓர் ஸந்தேஹம்.

(ஒரு பிராம்மணர் எழுதுகிறார்.)

சென்னை ராணுவத்தில் ஒரு குறிப்பிட்ட பட்டாளத்தில் தம்மையும சேர்த்துக் கொள்ளும்படி ஒரு பிராம்மணர்மனுப் போட்டார் அதன்மீது கவர்ன்மெண்டார் சில கஷ்டங்களிலிருந்தபடியால் அந்த மனுவையும், தங்கள சிபார்சையும் இந்திய கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார்கள். பிராம்மணர்களையும் அந்தப் பட்டாளத்தில் சேர்ந்துக்கொள்ளலாமென்றும், மாம்ஸ உணவு விரும்பாதவர்களுக்கு வேறுஉணவு கொடுக்கலாமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

பிராம்மணர்கள் ராணுவத்தில் சேரலாமா அது அவர்களுடைய மதாசாராநுஷ்டானங்களுக்கு ஏற்றதா, இத்யாதி கேள்விகள் இச்சமயம் கிளம்புகிறது. பிராம்மணர்கள் தற்சமயம் ஏராளமாக பட்டாளங்களில் சேரலாமென்பதே நமது அபிப்பிராயம். சாஸ்திரமோ, சரித்திரமோ இதற்கு விருத்தமாயில்லையென்றும்நாம்நினைக்கிறோம் பிராம்மணர்கள் ஜீவனமில்லாத காலத்தில் க்ஷத்திரிய தர்மங்களை பின்பற்றலாமென்று மனு முதலியவர்கள் கூறுகிறார். மஹாபாரத யுத்தத்திலும் வேறு சந்தர்ப்பங்களிலும் த்ரோணர் அச்வத்தாமா போன்ற பிராம்மணர்கள் யுத்தத்தில் சேர்ந்திருந்ததை மறுப்பாரில்லை. யுத்தத்தில் கொல்லுவது பாபமல்லவென்று ஹிந்து தர்ம முறையாயிருக்கிறது.

பிராம்மணர்களுக்கு ஸந்தியாவந்தனாதி நித்தியகர்மங்களுக்கும் ஆஹார நியமங்களுக்கும் குந்தகம் ஏற்படக் கூடுமென்று நினைக்கலாம். இது க்ஷத்திரியர்களுக்கும் பொதுவான ஆக்ஷேபமே. அவர்களும் ஸரியானகாலத்தில் ஸந்தியை ஜபம் முதலானவை செய்யவேண்டியவர்களல்லவா?

யுத்த ஸந்தர்ப்பத்தில் நித்யகர்மங்களை சுருக்கிக்கொள்ளவும் வேறுபல நியமங்களைத் தளர்த்திவிடவும் சாஸ்திரமுண்டு. குருக்ஷேத்திர யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் ரதங்களிலும் யானை, குதிரை மீதும் வீற்றிருந்து யுத்தம் செய்துகொண்டிருக்கையிலே மானஸிகமாக ஸந்தியாவந்தனம் செய்ததாக மஹாபாரதம் கூறுகிறது. பிராம்மணர்கள் ஸேனையில் சேரக் கூடாதென்ற பெரியதடையும் சாஸ்திரங்களிலில்லையென்று அறிகிறோம். தவிர மனுவானவர் ஸேனாதிபதித்வம் முதலானவைகளை வேதமறிந்தவனே வஹிக்க அர்ஹதையுள்ளவனென்றும் கூறுகிறார். யுத்தத்திற்கு பிறகு பிராம்மணர் ஆசார லோபத்திற்காக பிராயச்சித்தம் செய்துகொள்ளவும் இடமிருக்கிறது.

இப்போதுகூட, கூர்க்கர், மஹம்மதியர் போன்ற பட்டாளங்களில் மததர்மத்தை அநுஷ்டிக்க ஸ்வாதந்திரியமும், அவகாசமும் கொடுக்கப்படுவதாக அறிகிறோம். அதுபோல் பிராமணர்களுக்கும் கிடைக்கத் தடையில்லை. மாம்ஸஉணவு விஷயமான நிர்பந்தமும் கிடையாதென்று ஸர்க்கார் உத்திரவே கூறுகிறது. ஆகவே பிராம்மணர்கள் மற்றத் தொழில்களில் ஸம்பந்தப் பட்டு ஜீவித்துவருவது போல் ராணுவத்திலும்

159

சேருவதால் மததர்மவிரோதம் பெரிதாக ஏற்பட நியாயமில்லை. பிராமணர்களுக்குள் ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் ஓரளவு விமோசனம் ஏற்படலாம். இதற்காக பிராம்மணர்கள் சரீர பலம் பெறவேண்டியிருக்கிறது. பிராசீன ஆசாரங்களையும் ஆஹார முறைகளையும் பிராப்மணர்கள் கைப்பற்றினால் அபரிமிதமான சரீரபலம் உண்டாகத்தடையில்லை.

இந்த நமது யோஜனையை ஆகரித்தோ ஆக்ஷேபித்தோ நேயர்கள் அபிப்பராயம் வெளியிடவேண்டுகிறேன்.

விஷமக்காரர்களுக்கு எச்சரிக்கை

ராமேஸ்வரத்தில் ஸனாதன தர்மிகள் நடத்திய மஹா நாட்டிற்குப் போட்டியாகச் சில காங்கிரஸ் வாதிகள் கூடிக் கொண்டு கூச்சலிட்டதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. ராமேச்வரம் கோவிலில் தீண்டாதாரைப் புகவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டு ஒரு தீர்மானமும் அவர்கள் செய்தார்களாம். இதிலிருந்து காங்கிரஸ் வாதிகள் மீண்டும் கோவில் அழிப்பு வேலையில் இறங்கி, தேசத்தில் அடங்கியிருக்கும் அமளியையும் ஆத்திரத்தையும் கிளப்பிவிட முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துத் தென்னிந்தியாவில் நடந்த ரணகளத்தை அதற்குள் காங்கிரஸ் வாதிகள் மறந்திருக்க நியாயமில்லை. ஸனாதனிகளின் கிளர்ச்சி காரணமாக, காங்கிரஸின், செல்வாக்குக் குறைந்தும், அதனிடம் அதிருப்தி அதிகரித்தும் காங்கிரஸ் பலஹீனமடைந்ததை காந்திஜியே 'ஹரிஜனில் குறிப்பிட்டார். டாக்டர் ராஜனின் ஆலயப் பிரவேசச் சுற்றுப்பிரயாண காலத்தில் அங்காங்கு நடந்த ஸம்பவமும் ஸனாதனிகளின் எதிப்பு வேகத்தை விளக்குவதாயிற்று.

காங்கிரஸ் ஆக்ஷிமீண்டும் தோன்றக் கூடாதென்று மற்றக் கக்ஷிகளைப் போல் ஸனாதனிகளும் வைஸ்ராய்க்கு அறிவித்தார்கள். ஆகவே ஆலயப் பிரவேசத்தால் தென்னிந்தியாவில் பிளவு அதிகரித்துவிட்டதை அறிந்து அவர்கள் சிறிது பின்வாங்கி நிற்கும்படி காந்திஜீ ஆலோசனை சொன்னார்.

அதன்மீது ஆலயப்பிரவேச பிரசார விபரீதம் சிறிது அடங்கியிருக்கிறது. மேலும், இப்போது காங்கிரஸ் ராஜ்யமும் இல்லை.

தவிர சட்ட மறுப்பு போன்ற பெரிய வேலையில் இறங்கு முன் தேச ஜனங்களுள் சண்டை சச்சரவிற்கிடமான கார்யமெதையும் செய்யக் கூடாதென்றும் காந்திஜியும் மற்ற தலைவர்களும் விரும்புகிறார்கள், இந்த நிலைமையில் பொறுப்பற்ற சில விஷமிகள் மீண்டும் ஸனாதனிகளைச் சண்டைக்கு இழுப்பதானால் அதனால் விளையும் தீங்கை அவர்கள் அனுபவிக்க நேருமென்று எச்சரிக்க விரும்புகிறோம். ஸனாதனிகள் முன்போல் மறுபடியும் காங்கிரஸை எதிர்த்துப் பெருவாரியாகக் கிளர்ச்சி செய்ய முன் வரவேண்டிவரும். காந்திக்கு இதில் விருப்பமிருக்காதென்று நாமறிவோம். ஆயினும் சில விஷமிகள் இந்தக் கலகத்தை ஆரம்பித்திருப்பது பெரும் விபரீதமாக முடியும். ஆதலால் இவர்கள் பூஜைவேளையில் கரடியை விட்டடிப்பதும், உள்நாட்டுச் சண்டையை மீண்டும் ஆரம்பித்திருப்பதையும் காந்திஜி உடனே தடுக்க வேண்டும். இல்லையேல் ஸனாதனிகள் தக்க பதில் செய்ய பின்வாங்கமாட்டார்கள்.

ஒரு ஸனாதனி.

பௌத்தமதம் வியாபிக்குமாம்!

சிலவாரங்களுக்குமுன் சைனாதேசத்திலிருந்து பௌத்தமதப்பாதிரிகள் சிலர் கல்கத்தா வந்தார்கள். அவர்கள் வெளியிட்ட அபிப்பிராயத்தில் பாரததேசத்தில் இனி வெகுஎளிதாயும், சீக்கிரமாயும் ஹிந்துக்களிடையில் பௌத்தமதம் பரவப்போவதாயும்,ஹிந்துமதத்தில் சிரத்தையும் நம்பிக்கையும் சிதைந்து எங்கும் பௌத்தக்கொள்கைக்கு இந்தியாவில் பெருத்த ஆதரவு ஏற்பட்டு வருவதாயும், அந்த நிலைமையை அபிவிருத்தி செய்யவே தாங்கள்வந்திருப்பதாயும் கூறினார்கள்.

இதைக்கேட்டு ஆஸ்திகர்களான ஹிந்துமதாபிமானிகள் லஜ்ஜையும், பயமும் அடையவேண்டியிருக்கிறது. வேதபாஹ்யமதத்தின் கொடுமையை பாரததேசத்திலிருந்து நிவிர்த்திக்க ஸ்ரீவியாஸ, சங்கர், ராமானுஜாதி நமது முன்னோர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல. அதன் மூலம் பாரததேசத்தின் உயிரான வைதிகதர்மம் தழைத்தோங்கி வந்தது. ஆயினும் இப்போதுள்ள நிலைமை என்ன? சீனப்பாதிரிகள் ஸந்தோஷப்படுவதற்கு காரணமில்லையா?

இப்போது நம்மவர்கள் தெரிந்தும், தெரியாமலும் பௌத்தமதக்கொள்கைக்கு ஆதரவு கொடுத்து வருவது ப்ரத்யக்ஷமாயிருக்கிறது. வைதிகஹிந்து பரம்பரையில் பிறந்தவர்களே அறியாமையால் பௌத்தத்தை ஆதரிக்கின்றனர். பள்ளிகூடங்களில் நமது மாணவர்களுக்கு புத்தருடைய மஹிமையும், பௌத்தமதச்சிறப்புமே அதிகம் போதிக்கப்படுகிறது. இன்தநாம் ஸஹித்துக் கொண்டுதான் இருக்கிறோம். இதன்மூலம் ஏற்பட்டுள்ள க்ஷோபங்களையும்அநுபவித்து வருகிறோம். வைதிகஹிந்து குலத்திப் பிறந்தவர்களே யாகத்தை நிந்திக்கிறார்கள். வேதம் பௌருஷேயம் என்ற வாதம் வெகுவாக வைதிகஹிந்துக்களுக்குள்ளேயே பரவ ஆரம்பித்து விட்டது. ஜாதிப்பிரிவினையையும் வர்ணாச்ரமதர்மங்களையும் ஆக்ஷேபிக்காத ஹிந்துக்களே இப்போது கிடையாது. இதெல்லாம் பௌத்தமதப்பித்துப் பிடித்திருப்பதின் அடையாளமல்லவா? சிகை, புண்ட்ரம், போன்றவைகளை வைதிகமதப்படி தரிப்பவர் வைதிககுலங்களில் கூட அரிதாகிவருகிறது. வைதிகமதத்தைப் பற்றி குதர்க்கமும், யுக்திவாதமும், சுஷ்க ஆக்ஷேபங்களும் மிகுந்து வருகின்றன.

இந்நிலைமையில் சீனப்பாதிரிகள் ஸந்தோஷப்பட நியாயமில்லையா? ஆயினும் பாரததேசத்தில் வைதிகமதஸ்தாபனத்திற்காக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்கள் இதை கவனிக்கவேணும். நமது முன்னோர்கள் மிகுந்த சிரத்தையுடன் காத்துக்கொடுத்த வைதிகமதத்தை அவர்களது பின்ஸந்ததியார் அழியவிடலாமோ? வைதிகமதத்தின் ஆதாரமான அம்சங்களையும், அவைகளின் கௌரவத்தையும், நமது மாணவர்களுக்கும், பெரியோர்களுக்கும் போதிக்க ஸரியானவழியில் பிரசாரம் ஆரம்பிக்க வேண்டியஸமயம் இதுவேயல்லவோ?

ஹைதராபாத்தில் அமளி

ஹிந்துக்களுக்கு லக்ஷக்கணக்கில் நஷ்டம். 150 கடைகள் அக்கினிக்கிரை

23—3—40-உ மாலை 4-மணிக்கு சில முஹம்மதிய பையன்களுக்கும் இரு இந்து பையன்களுக்கும் ஏற்பட்ட ஒரு சிறிய சண்டையின் காரணத்தால் 'பீடார்' என்ற இடத்தில் பெரிய ஹிந்து முஸ்லீம் கலகம் நடந்தது. அதன் விளைவால் பாஸந்தராவ் என்ற ஒரு வக்கீல் கீஸம் காலி என்றஇடத்தில் சில மஹமதியாரால் தாக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் இறந்தார்.

ஒரு விநாடியில் இச்சேதி நகரம்முழுவதும் காட்டுத்தீ மாதிரிபரவியது. நூற்றுக்கணக்கான மஹம்மதியர்கள் ஆஸ்பத்திரியின் வாசலில் கூடினர். அவர்கள் உடனே இச்சம்பவம் நடந்த இடத்திற்குக்கூட்டமாகச் சென்றனர். ஹிந்துக்களின் கடைகளை நெருப்புவைத்துக் கொளுத்தினார்கள் முஹம்மதியர்களுக்குச் சொந்தமான அந்தக்கட்டிடங்களுக்கு யாதொரு விபத்தும் நேராவண்ணம் வாடைகைக்கு வைத்துக்கொண்டிருந்த ஹிந்துக்களின் ஜவுளி பல சாக்கு, மளிகைக்கடை சாமான்களை வெளியில் எடுத்தெறிந்து அதற்குத் தீயிட்டனர்.

கடைத்தெருவிற்குப் பக்கத்திலிருந்த பாபுராவ் தேஷ்பான்டே அவர்களின் மோட்டார் ஷெட்டு ஆயில் என்ஜின். வாடர் பைப் இவைகளையும் நாசம் செய்து எரிகிற நெருப்பையும அணைக்க முடியாதபடி அப்படும் பாவிகள் செய்துவிட்டனர். சொல்லோணாத்துயரத்திற்கு உள்ளான அப்பக்கத்து ஹிந்து ஏழைகள் பக்கத்து ஆஸ்பத்திரியில் இருந்த போலீஸ அதிகாரிகளிடத்திலும், நியாயஸ்தலத்திலும், தங்களுக்கு உதவி செய்யும்படி மன்றாடிக்கேட்டுக் கொண்டார்கள், அதற்கு அந்த ஜீவகாருண்யமுள்ள அதிகாரிகள் அக்கூட்டத்தை சமாளிக்கத்தக்க போலீஸ் படையும் ஆயுதபலமும் இல்லையென்று உதவிசெய்ய மறுத்து விட்டனர் அன்றிரவு 9 மணிக்கு "கர்பியூ" ஆர்டர் போடப்பட்டது. ஆனால் அது பேப்பர் அளவிலே தான் இருந்தது. இரவு 3-மணி வரையில் அக்கினியின் ஆட்சியும் மஹம்மதிய மூர்க்க, மடத்தனமதையும், தலைவிரித்தாடியது. தீ விபத்தோ' இரண்டு, மூன்றாவது நாளில் கூடநின்றபாடில்லை யென்றால் அதை நினைக்கும் போது நெஞ்சுபதைக்கிறது. உள்ளம் துடிக்கிறது, உயிர் ஊசலாடுகிறது. சுமார் 150. ஹிந்துக்கடைகள் தீக்கிரையாகின சுமார் 40 லட்சரூபாய் வரையில் ஹிந்துக்கள் பறிகொடுத்தனர். அந்தப்பக்கத்து ஹிந்துவாசிகளுக்கு உணவுப்பொருள்களும்' ஆடை முதலியவைகளும் வாங்க வழியில்லையாம். ஹிந்துக்கள் திக்ப்பிரமை கொண்டு யாதுசெய்வதெனத் தெரியாது விழிக்கின்றனராம். இது சம்மந்தமாய் ஸேத்வித்தல் தாஸ் என்பவரைகைது செய்திருக்கின்றனராம். ஓடிப்போன இன்னொரு ஹிந்துவும் போலீஸிடம் சரணாகதி அடைந்தானம்.

"மராட்டா"

காங்கிரஸ மாளிகைக்கு பணம் கொடுக்ககூடாது

சென்னை கவர்னமேண்டு உத்திரவு

சென்னையில் எரிந்து போன காங்கிரஸ் மாளிகையைப் புதுபிக்க முனிஸிபாலிடி, ஜில்லாபோர்ட் முதலியவைகள் பண உதவி செய்யலாமா என்ற கேழ்வை பிறந்தது.

அதன் மேல் சென்னை கெவர்ன்மெண்டார் ஓர் உத்திர பிறபித்து ஸ்தலஸ்தாபனங்கள் காங்கிரஸ் மாளிகை கட்டப் பண உதவி செய்யக் கூடாதென்று தடுத்து விட்டார்கள்.

வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

ஜின்னாவின் வெடிகுண்டு !! முஸ்லீம் இந்தியா, இந்து இந்தியா என இரண்டாக பிரிக்க அவர் யோஜனை கூறுகிறார் ஸமயத்தில் நானுமிருக்கிறேன். என்று தமிழர் நாயகர் தலைவர் சரி அதற்கு பல்லவி பாடுகிறார். ஏற்கனவே தனிமாகாணம் கோருகிறது ஆந்த்ர தேசம் 'பண்டய 54 தேசம் வருமோ ?

இத்தகைய தலைவர் தேவை!! ஸ்ரீமான் ஸவர்க்கரது காரஸாரமான சொற்களும் சளைப்பில்லாத உழைப்பும் தமிழ்நாட்டை தட்டி எழுப்பிற்று. நமது தர்மஸபைக்கு அத்கைய தலைவர் வந்து தக்ஷிணதேசத்தை ஒன்றுபடுத்தி ஊக்கமளித்தால் அதர்ம பேய்கள் பறந்தோடும். நாகபுரிக்குச் சென்றிருக்கும் தலைவர் எப்படி வருகிறார் பார்ப்போம்.

நன்றாக நடத்தலாம்! வேலை செய்பவரைகுறை கூறுவதாத எண்ணலாகாது· ராமேச்வரம் மிக புண்யக்ஷேத்ரம் ஈஸ்டரில் ரிடன்டிகெட் கொடுக்கப்படுகிறது. உத்ஸவமும் சேர்ந்தால் எல்லோரும் அழைக்காமலே ஸபைக்கு வருவர். யாத்திரைக்கு வருபவர் பிரயோஜனத்தை எதிர்பாரார். வேண்டிய ப்ரசாம் செய்து தார்மிக ஸபைகளுக்கு அழைப்புப் பத்திரம் அனுப்பி இன்னும் சிறப்பாக நடத்தியிருக்கலாம். நடந்தவரை சந்தோஷமே.

நன்கு நடைபெறுக!! நம் நாட்டு தலைவர் பலரும் நாகபுரி சென்றிருக்கிறார். அ. கி. வர்ணாச்ரம ஸபை பெயராலும் அ. இ. ஸநாதந தர்ம ஸபையின் பெயராலும் ஸபை நடக்கிறது. ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஸ்வாமிகளும் அங்குவருவதால் ஸபை இனிது நடைபெற்று உத்ஸாஹமுள்ள வேலையைக்காட்டி தலைவரும் தென்னாட்டில் ப்ரகாசம் செய்ய இறைவனருள் புரிவாரா ?

என் நீக்கினர் ! பிராம்மணர், சண்டைவீராகச் சேரக்கூடாதென்றிருந்த விதியை சென்னை அரசாங்கம் மாற்றிற்றாம். இதில் ஒன்றில்தான் இதுவரை பிராமணஜாதி புகவில்லை அதில் சேருபவர் ஸாத்விகரில்லை! ஆதலின் எப்படியாவது போகட்டுமென மனம்வரவில்லை! உத்தம பிறவிபெற்றும் பாழாவதேன்?

பயிருக்கு முன்முளையா? சென்னை மாகாணத்தில் இன்றும் ஹிந்து ஸபையின் வேர் ஊன்றவில்லை. இதற்குள் அது பிராமணமயமாய் விட்டதே எனும் களை முளைத்தது விந்தை!!

சிந்திய! சோல் ரத்நம்!! ஸமயசால்யர் ஹிந்துராஜ்யமே!! எங்கு பெரும்பான்மையோர் ராஜ்யமில்லை? முன்னுக்குவர முஸ்லீம்மை துணைகொள்வோம்! முரண்டு முட்டுக்கட்டை போட்டால் இழுத்துச் செல்வோம், விட்டும் செல்வோம்!! என பற்பல அரிய கம்பீரமான சொற்களை உதிர்த்த சாவர்க்கரிடம் ஹிந்து மகம்மதிய ஒற்றுமைக்குழைப்போர் சிறிது காலம் பயிற்ச்சி செய்வது நலம்!!

மதக்கல்வி மிகஅவச்யமே!! ராமேச்வரம் ஸநாதந வாலிபர் ஸபை ஒவ்வோர் பாடசாலையிலும் மதக்கல்வி அவச்யம் கற்பிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானம் செய்தது. இதை அநுஷ்டானத்திற்கு கொண்டுவரவேண்டுமாயின் டிஸ்ட்ரிக்ட் போர்ட்டுகளை தார்மீகர் கைகொள்ளவேண்டும்! தீர்மானமாவது செய்த வாலிபருக்கு நன்றி கூறுவாம்.

ஸத்யாக்ரஹத்தீர்மானம் ஒரு மறுப்பு

26—3—40ல் இராமேஸ்வரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு ஸநாதன மஹாநாட்டில் ஆலயப்பிரவேசச் சட்டம் உடனே ரத்து செய்யப்படாவிட்டால் சென்னை சர்க்கார் காரியாலய முன்னால் கூடியசீக்கிரம் சத்தியாக்ரஹம் ஆரம்பிக்கப்படும் என்ற தீர்மானம் தலைவர் மறுத்தும் நிறைவேறினதாக சுதேசமித்திரன், ஹிந்து மார்ச் 29-உ தினப் பதிப்புகளில் வெளியான செய்தி முற்றிலும் தவறு. சத்தியாக்ரஹத்தீர்மானமே ஷை மஹாநாட்டில் எவராலும் கொண்டுவரப்படவில்லை என்பதை மஹாநாட்டில் பிரதிநிதியாக பூரணமாகக் கலந்து கொண்ட முறையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த தவறான செய்தி வெளியிடுவதற்கு எவர் காரணஸ்தர்களாயிருப்பினும் ஸநாதனிகளின் இயக்கத்திற்கே இழிவு உண்டு பண்ணியவர்களாகவே அறிவாளிகள் அவரைக்கருதுவர். ஸநாதனிகளுக்கு இது சோதனை காலம். சத்தியத்தையும் நேர்மையையும் உணர்ந்து பொறுப்புடன் செயல் ஆற்றவேண்டும், இஃது போதுமானதென்று கருதி இதுசமயம் இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

தி. ப. ஜகதீசய்யர்

பின்லாந்து—ரஷ்ய யுத்தம்.

பின்லந்தின் நஷ்டம்.

ரஷ்ய—பின்லாந்தின் யுத்தத்தின் காரணமாக, பின்லாந்து அடைந்த சேதமானது பின்வரும் புள்ளி விவரங்களால் தெரியவரும்:—

15,000, மனிதர்கள் யுத்தத்தில் உயிர் இழந்தனர்; 9,000 ஸ்திரிகள் விதந்துவாயினர்; 25,000 குழந்தைகள் அநாதைகளாக ஆகினர்; 5,000 விடுகள் ரஷ்ய வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு அதில் மூன்றில் ஒருபாகம் சுத்தமாக தகர்த்கதரியப்பட்டன. அதன் காரணமாக ஐந்து லக்ஷம் ஜனங்கள் தங்க இடமில்லாமல் இருக்கின்றனர்

இப்போது நடந்து கொண்டிருக்கும் மகாயுத்தத்தோடு ஒப்பிட்டுபார்த்தால், பின்லந்து யுத்தம் பலவிதத்திலும் பின்னணியில் இருக்கிறது. மகாயுத்தத்துக்கு பிறகு ஆரம்பித்து சீக்கிரமே முடிந்த பின்லந்து யுத்தத்தில் இவ்வளவு மஹத்தான நஷ்டம் ஏற்பட்டால், மஹாயுத்தத்தின் முடிவில் அதனால் ஏற்படும் விளைவை நினைத்தால் பயங்கரமாய் இருக்கிறது.

திப்பிராஜபுரம்.

ஸ்ரீ ப்ரம்ம வித்யா ஸபா.

மார்ச்சு-௴ 16, 17-உகளில் ஆங்கரை ப்ருமஸ்ரீ ரெங்கசாமி சாஸ்திரிகளவர்கள், தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டு வரும் ஸ்ரீ ப்ரும்மசூத்திரத்தின் இரண்டாவது அத்யாயமாகிய "அவிரோதத்யாயத்தை" ஒருவிதமாக பூர்த்திசெய்தார்கள்.

18-உ திங்கட்கிழமை உள்ளூர் ப்ரும்மஸ்ரீ நாராயணஸாமி ச்ரௌதிகள் "அம்பரீஷாக்யானம்" என்னும் சரித்திரத்தை வெகு அழகாக மறுதினத்துடன் சொல்லிப்பூர்த்தி செய்தார்கள். அப்போது அவ்விடம் வீற்றிருந்த விஷ்ணம் பேட்டை ப்ரும்மஸ்ரீ பிச்சு சாஸ்திரிகளவர்கள் வேதமஹிமையைப்பற்றியும், வேதாத்யயனத்தின் ஆவச்யகத்தைப்பற்றியும் சிறிது பேசினபிறகு, தஞ்சாவூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் (மணி சாஸ்திரிகள்) அதை அநுஸரித்து, நாம் எல்லோரும் ப்ரதிதினமும் செய்கிற கணக்கில்லாத பாபக்குவியல்களைப் போக்குவதற்கு நமது வேதத்தை சரணமடைய வேண்டியதைத்தவிற வேறு கதியில்லை என்றும் வேதாந்தங்களின் தாத்பர்யமே, நமக்கு ஏற்படும் ஸகலமான கஷ்ட துக்கங்களைப் போக்கி, சுகசௌக்கியாதிகளைத்தந்து மோக்ஷபர்யந்தமுள்ள ஸெளகானந்தத்தை அடையப்பெறுவதில் தான் என்று சொல்லி முடித்தார்கள்.

23-உ சனிக்கிழமை உள்ளூர் ஸம்ஸ்கிருத உபாத்தியாயர் வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஆஸ்திகர்களாகிய நாம் எல்லோரும் கடைத்தேறவேண்டியதிற்கான சில இலகுவான ஸாதனங்களையும், மார்க்கத்தையும் அழகாகச் சொல்லி உபன்யஸித்தார்கள்.

30-உ சனிக்கிழமை ஆங்கரை ஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரிகளவரகள் ஸ்ரீ ப்ரும்மசூத்திர உபன்யாஸத்தை மேற்கொண்டும் ஆரம்பித்தி மறுதினம் ஞாயிற்றுக்கிழமையுடன் 3 வதான ஸாதனாத்யாயத்தை முடித்தார்கள். ஷை இரண்டு தினங்களிலும் தினம் ஒரு மணி நேரம் கொடுமுடிவித்வான் ப்ரும்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்கள், நமது ஸநாதன தர்மத்தின் உயர்வைப் பற்றி வெகுவாகச் சொல்லி, தினப்படி, நமதுபுராதனமான சாஸ்திரத்துக்கு ஒத்தபடி, நம்முடைய தினஸரி வாழ்க்கையில், ஸ்நானவிதிகள், நித்ய கர்மானுஷ்டானம், ஆசாரம், சீலம் இதுகளை சற்று சீர்தூக்கி பார்த்து கொஞ்சமாக அநுஸரித்து வந்து அபிவிருத்திக்குக் கொண்டுவந்தோமேயாகில், இஹத்தில் விசேஷஆரோக்யவான்களாயும், பரத்திலும் மிகுந்தச்ரேயோவந்தர்களாயும் இருக்கலாம் என்று வெகு அழகாகச் சொன்னார்கள்.

(ந- நி.)

திருவாரூர்

ஸ்ரீ டி. எல் ஸுப்பய்யர் பிரஸங்கம்.

திருவாரூரில் நடந்த பங்குனி உத்திர உத்ஸவத்தின்கண் நடந்துவரும் வேதபாராயணகோஷ்டிகளினுடையவும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களின் விருப்பத்தின்படி திருக்கருகாவூர் ஸ்ரீமான் டி. எல். சுப்பைய்யரவர்கள் 22—3—40ல் விஜயம்செய்து அன்றிரவு 6–40 மணிக்கு கமலாம்பாள் சன்னதி எதிர்மண்டபத்தில் பிரசங்கபானு (சேங்காலிபுரம்) பிரும்மஸ்ரீ வைத்திநாத சாஸ்திரிகள் தலைமையின்கீழ் சுருதி ஸ்மிருதிகளும் நமது கடமையும் என்னும் விஷயம் சுமார் இரண்டரை மணிநேரம் பிரஸங்கித்தார்கள். வேதகோஷ்டிகளும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களும் வந்து கேட்டு ஆனந்தித்தார்கள். சுருதி ஸ்மிருதிகள்மூலம் நாம் இகபர நன்மைகளை அடையவேண்டுமென்பதே பிரசங்கசாரம். தலைவர் உபன்யாசத்தை தொகுத்துக்கூறி ஸ்ரீமான் அய்யர் அவர்களின் பிரசங்கவன்மையையும் ஆஸ்திக குணத்தையும் புகழ்ந்துகூற கூட்டம் கலைந்தது. மறுநாள் பங்குனி உத்திரத்தன்று வேதகோஷ்டிகளுக்கும் வேதகோஷ்டி தலைவர்களுக்கு இயன்றளவு பொருளளித்து மேன்மேலும் விருத்தியாகவேண்டி உற்சாகமூட்டினர்.

ந. நி.

தர்மப்ரசாரம்

[வி. அநந்தாசார்யன்.]

"தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" இது ஸ்ரீ வால்மீகி பகவானுடைய அழகான நீதி வாக்கியம். தர்மம் கறைந்து வருவதால் உலகத்தில் துன்பம் அதிகமாகிறது என்பதும் அனைவருக்கும் ப்ரத்யக்ஷமே. இவ்விஷயத்தில் ப்ரசாரங்களும் ஆங்காங்கு விசேஷமாய் நடத்தப்படுகின்றன. ஆனாலும் இப்போது நடத்தப்படும் ப்ரசாரம் போதாது. பெரிய ஆஸ்தானங்களில் எழுந்தருளி இருக்கும் ஆச்சார்யர்களும் இவ்விஷயத்தில் அதிகமான ஊக்கத்தைக் காட்டவேண்டியது அவச்யம். ப்ரதி க்ராமத்திலும் இது விஷயமான ப்ரசாரம் வழங்கும்படி ஏற்பாடு செய்தால் உலகத்துக்கு க்ஷேமமுண்டு. நாளுக்கு நாள் மழை குறைந்து வருகிறது. அது காரணமாக தாந்யங்களின் உத்பத்தியும் குறைவுபடுகிறது. இக்குறை பல வருஷங்களுக்கு முன்னமே தோன்ற ஆரம்பித்தும் இப்போதே ராஜாங்க நிர்வாஹ அதிகாரிகளின் மனதில் புகுற இடம் ஏற்பட்டது, மழை குறையாமலிருப்பதற்காக முன் காலத்திய ஜனங்கள் க்ராமங்களிலும் நகரங்களிலும் ஒன்று சேர்ந்து பலவித தர்ம கார்யங்களை செய்து வந்தார்கள். அந்த தர்ம கார்யங்களை அரசாங்க அதிகாரிகளும் கவனம் செலுத்தி உற்சாகப்படுத்தி நடப்பித்து வந்தார்கள். இக்காலத்தில் உற்சாகங்கள் எல்லாம் நகரங்களிலேயே நடமாடுகின்றன. க்ராமஉற்சாகங்கள் வேரோடு அறுக்கப்பட்டு தொலைந்துபோயின. நகரவாசி ஜனங்களுக்கு துர்பிக்ஷம் தெரியாது. ஏனெனில் அவர் மாதச்சம்பளத்திலும் வ்யாபாரத்திலும் ஜீவிக்கின்றனர்.

ஆகையால் தாந்ய துர்பிக்ஷம் எங்கிருந்தாலும் கடைகளில் தான்யங்கள் மலிந்து வருகின்றன. அது காரணமாக நகரவாசிகளின் ஊக்கங்கள் வெவ்வேறு விஷயங்களில் செல்லுகின்றன. மழைக் குறைவுக்கு காரணம் தர்ம கார்யங்களின் குறைவுதான் என்பது நிச்சயம். "எது எதன்பிறகு உண்டாயிற்றோ, அது அதற்கு காரணம்" என்று ஒரு ந்யாயமுண்டு. தர்மம் குறையத் தலைப்பட்ட பிறகே மழைக்குறைவு ஆரம்பமாயிருக்கிறது. மேனாட்டு வித்வான்கள் ப்ரக்ருதி சாஸ்திர ஆராய்ச்சியில் மஹா நிபுணர்கள். அவர்களுடைய புத்திக்கூர்மை புதிய புதிய விசித்திர விசித்திரமான ஸௌகர்யங்களையும் விநோத வஸ்துக்களையும் உண்டாக்கி நமது தேசத்திய செல்வத்தை அயல் தேசத்துக்கு அனுப்ப உபயோகப்படுத்தப்படுகிறதே தவிர நமது தேசத்தில் தோன்றும் குறைகளை நீங்குவதில் செல்லுகிறதில்லை. இவ்விஷயத்தில் பாடுபடக் கடமைப்பட்டவர்கள் இந்தியர்களே. அதிலும் ஸநாதநிகளே. ஸநாதந தர்ம சாஸ்திரங்ககளிலேயே இவ்வித துர்பிக்ஷங்களை அகற்ற உபாயங்களும் முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

அவையாவன—ப்ரதிக்ராமமும் தேவாலயப்ரதிஷ்டை செய்வித்து பூஜைகளையும் உத்ஸவாதிகளையும் நடத்தல், யக்ஞயாகாதிகளை செய்வித்தல், இந்த்ரத்வஜோத்ஸவம் முதலான பழைய ஆசாரங்களை அனுஷ்டித்தல், ஸமூஹமாய் சேர்ந்து புராணப்ரவசநாதிகளை நடத்தல், மந்த்ர ஜபாதிகளை அதிகாரிகளைக்கொண்டு நடப்பித்தல் இது முதலியன. இவ்விஷயங்களை நடப்பிக்க ராஜாங்க அதிகாரிகளையோ மேனாட்டு நாகரீகத்தில் புகுந்து "ஈச்வரோஹம்" என்றிருக்கும் இந்தியர்களையோ எதிர்பார்த்து நிற்பதில் பிரயோஜனமில்லை ஸநாதநதர்மிகளே அதிகாரிகள். இக்கார்யத்தை ஒழுங்காய் நடத்துவதின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தக்க அதிகாரிகள் இப்போதிருக்கும் தர்மாசார்யர்களே. ஆசார்யர்களுடைய ஸௌலப்யக் குறைவால் பற்பல தேசங்களில் வசிக்கும் சிஷ்யர்களில் பலர் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரபத்தி ஞானோபதேசத்துக்குரிய க்ரந்தாந்வயங்க்ள் ஒன்றுமில்லாமல் வருந்துகின்றனர். ஆகையால் ஆச்சார்ய பீடத்தில் அதிஷ்டிதர்களாய் விளங்கும் ஸ்வாமிகள் அனைவரும் இவ்விஷயத்தில் முன்வந்து அங்காங்கு தங்களுடைய ப்ரதிநிதிகளை நியமித்து தர்ம ப்ரதிஷ்டாரீதியை புதுபிக்க ப்ரயத்நப்படவேணுமாய் வேண்டுகிறோம்

(வே. தீ.)

வெளியூர்ச் செய்திகள்

திருவாரூர்

யஜுர்வேத பாராயணம்.

இவ்வூர் ஸ்ரீதியாகராஜஸ்வாமி ர்பிமோத்ஸவம் வெகுசிறப்பாக நடந்தேறியதில் இவ்வூரில் சற்றேறக்குறைய 35 வருஷ காலமாக வசித்து வருபவரும் தற்காலம் ஜம்புகேச்வரம்யஜுர்வேதபாடசாலையில் உபாத்யாய பதவியை வஹித்துவருபவருமாகிய', சித்மல்லி பிரும்மஸ்ரீ R. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் பிரதிவருஷமும் நடத்தப்பட்டுவரும் வேதபாருயண ஸந்தர்ப்பணைகள் இவ்வருஷமும் ௸யார் விடாமுயற்சியால் நடந்தெறியது. ௸ உத்ஸவத்தின் விசேஷபுண்யகாலமாகிய ருத்திரபாத மகாதீர்த்தத்துக்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் விஜயம் செய்தும், மகாஜனங்களை அனுக்ரஹித்தும் ௸ வேத பாருயணம் ஸ்ரீ ஆசாரயாளின் பரிபூர்ண கிருபாகடாக்ஷத்தினால் பூர்த்தி செய்துவைக்கப்பட்டது.

(ஒருநிருபர்)

நாகப்பட்டணம்

ஸ்ரீஸீதாரம பட்டாபிஷேக மஹா உத்ஸவம்

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்கள் ஸ்ரீராமசந்திரன், இவர்களுடைய, திவ்யனுகிரகம் முன்னிட்டு ஸ்ரீ சட்டநாதஸ்வாமி ஸன்னிதியில் 2—2—40.ல் வேதாந்த விபூஷணம் பிரம்மஸ்ரீ ஆர். வெங்கட்டராம சாஸ்திரிகளால் ஆரம்பித்து நடந்துவந்த ஸ்ரீ வால்மீகிராமாயண பிரவசனத்தில், 17—3—40. ஞாயிற்றுக்கிழமை ௸ உத்ஸவம் விமரிசையாய் நடந்தது ௸ ஸ்வாமிகள் மந்திராக்ஷதைப்பிரஸாதம்; சால்வை அனுப்பி அனுக்கிரகித்தார்கள். ஸ்ரீமான் ஸ்ரீநீலாயதாக்ஷி அம்மன் டிரஸ்டி என். கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்கள், வக்கீல் ஸ்ரீமான் பி. எஸ். சிவராம அய்யரவர்கள், முதலியகனதனவான்களும், பக்தர்களும், மிகுந்த சிரத்தைஎடுத்துக் கொண்டு ௸உத்ஸவத்தை பரிமளிக்க செய்தார்கள் ஸ்ரீமான், முன்ஸீப் முதலியவர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். கார்யதெரிசி வக்கீல் என். சாம்பசிவய்யரவர்கள் உபசாரம் கூறினர்,

(ஒருநிருபர்)

மாம்பலம்

ஷஷ்டியப்த பூர்த்தி.

மாம்பலம் அஷ்டபதி பஜனை ஸபை தலைவருக்கு 17உ ௸ உத்ஸவம் நடந்தது. ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ப்ரஸாதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. மாலையில் ஸ்ரீ ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா ஸம்ஸ்கிருதத்தில் ஓர் அபினந்தநபத்ரமளித்து ருத்ராக்ஷ மாலையுமளித்தார். நகை வியாபாரி ஸ்ரீ ரர்மசந்திரய்யர் தங்கத்தினால் ராதா கிருஷ்ணனைச் செய்து துளஸிமாலையுடனளித்தார். ஸபையார் தக்க ஸன்மானம் செய்தனர்.

(ந.நி).

மஹாபாரதம் விதுரநீதி

(1) மனிதர்கள் முன்னுக்கு வர அடியிற் கண்ட 8 குணங்கள் அவச்யம்:

(1) நல்ல அறிவு, (2) குலத்துக்கேற்ற தொழில், (3) இந்திரியங்களை தன் வசத்தில் வைத்திருத்தல், (4) பெரியோரிடம் பற்பல விஷயங்களைக் கேட்டுத் தெரிதல் (5) காலத்தை வீணாகக் கழிக்காமல் சுறுசுறுப்புடன் இருத்தல், (6) அளந்து கொஞ்சமாய் பேசுதல், (7) தன் சக்திற்கேற்றபடி கொடை, (8) பிறர் சிறிது உபகாரம் செய்தாலும் அதை பாராட்டல்

(2) உயர்ந்த ஸ்திதிக்கு வரவேணும் என்று ஆசை கொண்டவன் அடியிற் கண்ட ஆறு துர்குணங்களை விட்டொழிக்க வேணும்.

(1) அதிக தூக்கம், (2) சோம்பல், (3) எந்த கார்யம் செய்தாலும் என்ன தீங்கு வருமோ வென்று எப்போதும் பயம் (4) தன்னால் அடக்க முடியாத கோபம், (5) அஜாக்ரதை, கார்யம் செய்ததில் அதிக தாமதம்.

(வே. தீ.)

PAYASYA

Increases abundantly
the supply of
Mother's Milk
and
Enriches its quality.
A great boon
to
Mother and Baby,

24 Tolas:- Rs. 2-4-0 for 16 day's use.
(Packing and Postage Extra.)

Apply to :—
Attreya Ayurvedic Works,
Tennure Road, TRICHINOPOLY

ஸனாதன தர்மமே பவரோகத்திற்கு ஒப்பற்ற வைத்யம்

(மந்த்ரமூர்த்தி ப்ரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள்)

மனிதர்களுக்கு 5-விதமான ரோகங்கள் உண்டு அதாவது கெர்ப்பவாஸாதி ஜனன ரோகம் 1 ஆத்யாத்மிகம் 2 ஆதிபௌதிகம 3 ஆதிதெய்விகம் 4 மரணம் முதலானது 5 கெர்ப்பவாஸரோகமானது 4 யுகம்வரையில் அசங்கிகை எடுக்கமுடியாத கடும்பாருவின் கஷ்டத்தைக் காட்டிலும் லக்ஷம்மடங்கு அதிகமான கஷ்டத்தை 7 முதல் 3 மாதத்திற்குள் சிசுவானது நல்ல ஞாபகத்துடன் அனுபவிக்கிறது. கெர்போப்நிஷத்தை பார்க்கவும். ஆத்யாத்மிகமாவது க்ஷய குல்மம் ஜ்வராதிகளான 4448 வ்யாதிகளால் கஷ்டப்படுவது 2 ஆதிபௌதிகமாவது ஸர்ப வ்ருச்சிகாதி ஜந்துக்களாலும் பூதப்ரேதாதிபிசாசுகளாலும் சத்ருஜனங்களாலும் ஹிம்ஸிக்கப்படுவது 3 ஆதிதெய்விகமாவது பூகம்பத்தாலும் மஹாநதி ஏரிகளின் ஜலப்ரவாஹ உடைப்பினாலும் அக்னிபாதையாலும் புயல் காத்து மழை இடி மின்னல்களாலும் 12 வருஷம் மழையில்லாமல் புல் பூண்டு முளைக்காமல் மஹாக்ஷாமம் ஸங்காதமரணம் ஸம்பவிப்பது 4 மரணத்திற்குப் பிறகு ஏற்படும் கஷ்டத்தை சொல்லிமுடியாது. தர்மராஜாவானவர் ஸத்யவான் உயிரை கொண்டு போகுங்காலத்தில் ஸாவித்திரியானவள் பின்தொடர்ந்து போய்கொண்டே பாபங்களின் தெண்டனைகளைப்பற்றி கேட்டதற்கு பதில் சொல்லுகிறார்.

பாபங்களும், நரகானுபவமும்

பொய்சபதம் செய்தவன், மித்ரத்ரோஹம் பண்ணினவன், செய்த உபகாரத்தை மறந்தவன், நம்பினவனுக்கு வாக்குக் குடுத்து துரோஹம் செய்தவன், பொய் ஸாக்ஷி சொன்னவன், திருடுகிறவன் இவர்கள் என்னுடைய தூதர்களால் ஜ்வாலாமுகம் என்ற நரகத்தில் 1000 சதுர்யுகம்வரையில் அக்னிஜ்வாலையில் தள்ளி பொசுக்கப்பட்டு பிறகு மேல்குறிப்பிட்டவர்கள் முறையே குரங்கு, கீரிப்பிள்ளை, தாடையில் காம்புள்ள ஆடு புலி தவளை ஜன்மங்களை 7 தடவை அடைகிறார்கள். நித்யகர்மங்களை செய்யாதவர்கள், வேத சாஸ்த்ரங்களை பொய் என்று தூஷிப்பவர்கள் ஏகாதசி முதலான வ்ருதானுஷ்டானம் செய்யாதவர்கள் புராண உபன்யாஸம் பண்ணுகிறவர்களையும் ஸதாசாரமுள்ள ஸாதுக்களையும் தூஷிப்பவர்கள் தேவப்ராம்மண ஸொத்தை திருடினவர்கள் இவர்களெல்லோரும் தாம்ருந்தம் என்ற நரகத்தில் 1000 யுகம் காடாந்தகாரத்தில் மூழ்கிக்கொண்டு புகையை ஸாப்பிட்டு 7 த்வாரங்களால் உள்கொண்டு கஷ்டபடும்போது 10 தலைமுறை இவர்களுடைய பித்ருக்களை ஸ்வர்கத்திலிருந்து தலைகீழாய் தள்ளிவிடுகிறார்கள் நரகயாதனைக்கிப் பிறகு இவர்கள் முறையே க்ருமி புழு தேள் பாம்பு முதல் ஊர்வனவாயும் கொசு இ பக்ஷியாகிய பறப்பனவாயும் மத்ஸ்ய மகராதி ஜல ஜந்துக்களாயும், ஓநாய் நரி வகை கழுதை குதிரை வகை மான் வகை எருமை பசு வகை ம்லேச்ச துருஷ்க சூத்ர வைச்ய ஜன்மங்களை 7 தடவை வீதம் அடைந்து ம்லேச்சர் முதல் மனித ஜன்மத்தில் ஷடி ஸாமான்ய தர்மங்களை அனுஷ்டித்தவர்களானால் க்ஷத்திரிய ப்ராம்மண ஜன்மங்களை அடைகிறார்கள் என்று இவ்விதம் நூற்றுக்கணக்கான பாபங்களும் நரகாதி ஜன்மானுபவங்களும் ஸாவித்திரிக்கி சொல்லப்பட்டன.

இதுகள் மரணத்துக்குப் பிறகான வியாதிகள் 5-வது அதுகளில் ஷடி ஸாமான்ய தர்மானுஷ்டானத்திற்கு எதிர் நடையாக பாபம் செய்தவர்களுக்கு அடையாளமாக ஒரு நரகாதிவிஷயமும் வர்ணாச்ரமதர்மானுஷ்டானம் செய்யாமல் விபரீதமாய் நடந்த ப்ரும்மணாதி 3 வர்ணத்தாருக்கு அடையாளமாக ஒரு நரகஜன்மானுபவங்களான இவ்விரண்டு விஷயந்தான் எழுதப்பட்டது. இதனாலும் கொள்ளவேண்டிய விஷயம் உலகத்தில் 84 லக்ஷம் ஜீவராசிகளை ஈச்வரன் விசித்ரமாக ஸ்ருஷ்டித்ததற்க்கு மனிதனாகப் பிறந்து இருவித ஸனாதன தர்மானுஷ்டானம் செய்யாமல் பாபம் செய்தது தான் காரணம். மனிதனே ஜந்துவாகப் பிறக்கிறான் இவ்விதம் பாப கர்மங்களை செய்து அதோகெதி அடையும்படியான 5 வித வ்யாதிக்கும் வைத்யம் ஸனாதன தர்மானுஷ்டானந்தான். பூர்வஜன்ம பாபத்தின் துர்வாஸனைகளையும் விலக்கும் ஸனாதன தர்மானுஷ்டானமே ஸித்தர்களுடைய கமனகுளிகைபோலிருந்து கொண்டு ஸ்வர்கலோகத்தில் கொண்டுபோய் சேர்த்து ரஸாயனமாகயிருந்து பசி தாகம் ஜரைமரணமில்லாமல் நித்யயுவர்களாக செய்துவிடும் மோக்ஷமென்ற வீட்டையவிரும்பியவர்களுக்கு ஷடி தர்மானுஷ்டானபலனை ஈச்வரார்பணம் செய்துவிட்டால் அம்ருதமாகயிருந்து நித்யாநந்தத்தையும் குடுக்கும்

(ஸ்வர்கத்வீபாந்தரம் கத்வாமோக்ஷரத்னம்ஸமச்னுதே) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷடி தர்மானுஷ்டாங்களை மிகவும் பக்திச்ரத்தையுடன் செய்தால் இந்த ஜன்மத்திலேயே அஷ்டலக்ஷ்மீஸித்தியையும் ஸுகானுபவங்களையும் ஜீவன் முக்தியையும் குடுக்கும்.

ஆறு நித்ய கர்மங்கள்

வர்ணாச்ரமதர்மங்களுக்குள் க்ருஹஸ்தாச்ரமதர்மம் மிகவும் விஸ்தாரமாயுள்ளது அதுகளுக்குள் 40 ஸம்ஸ்காரங்கள் முக்யமாயுளளது இதிலும் ஸாரமாயுள்ளது நித்யகர்மங்களான 6 கர்மங்கள்

(ஸ்னானம் ஸந்த்யாஜபோஹோம: ஸ்வாத்யாயோ தேவபூஜநம் ஆதித்யம வைச்வதேவஞ்சஷட்கர்மாணிதிநேதிநெ) இதுகளில் ஸ்னானமென்பது ஸங்கல்பம் 1 வருணசூக்தபடனம் 2 ஆபோஹிஷ்டாமந்த்ரத்தால் ப்ரோக்ஷணம் 3 அகமர்ஷணசூக்தபடனம் 4 தேவரிஷிபித்ருதர்பணம் யக்ஷ்மதர்பணம் சிகோதகம் வாஸோதகம் 5 இந்த 5 அங்கத்தோடு கூடிய அருணோதய ஸ்னானந்தான் ஸ்னானகர்மாவாக ஆகும். மைத்தஸ்னானங்கள் காக்கை பக்ஷியின் ஸ்னானந்தான். பிறகு 3 காலஸந்த்யாவந்தனம் காயத்ரீஜபம் 108 28–36 ஸ்னானம் ஸந்த்யா ஜபம் இந்த 3 ம் சேர்ந்து 6 ல் ஒன்று இந்த ஸ்னானாதி 3 ம் 6 களுக்குள் மிகவும் முக்யமானது. இந்த ஸ்னானாதி மூன்றின் விதிகளைநன்றாய் விசாரித்து தெரிந்துகொண்டு பக்திச்ரத்தையுடன் காயத்ரீயின் அர்த்தபாவனையுடன் ப்ராம்மணர்கள் எல்லோரும் அனுஷ்டித்து வந்தால் இந்த இந்தியாவில் அவர்களை ஜயிக்கயாராலும் முடியாது ப்ரும்மணர்களின் ஸமுதாயத்தில் நிக்ரஹானுக்ரஹசக்தி பெறலாம் மைத்தஸனாதனர்மங்களும் நடைபெறும் ஸர்வாதாரமான இம்மூன்று கர்மங்களை நாம் விட்டு விட்டு உபநயதத்தை 12–16 வயதுக்கு மேல் செய்து ப்ரௌடாவிவாஹத்தை அனுஷ்டித்துக்காட்டி சாரதாசட்டத்தையும் அங்கீகரித்து ப்ரௌடாஸ்த்ரீயை விவாஹித்தவன் (வ்ருஷலீபதி) என்று சாஸ்த்ரம சொல்லியபடி நம் பாதித்யமடைந்து பல்லைப்பிடிங்கின ஸர்பம்போல் நிக்ரஹானுக்ரஹசக்தியற்று யிருக்கிறோம். நம்மவர்களேநின்று நீதிக்கரையை உடைத்து ஆலயப்ரவேசாதி அதர்மப்ரவாஹத்தைப் பெருகவிட்டபோதிலும் சிலஸாதுக்கள் ஆங்காங்கு செய்து வருகிறகாயத்ரீஜப சாந்தியால் ஷடி ப்ரவாஹத்தில் ஆழ்ந்திப் போகாமல் மீனாக்ஷியின் கோபத்தால் விக்னங்கள் ஒதுக்கப்பட்டு நம் ஸனாதனி என்றபெயருடன் ஜீவித்து வருகிறோம் ஸ்வல்பகாயத்ரீஜபத்திற்க்கு இவ்வளவு மஹிமையிருக்கிறது

காயத்ரீ ஜப மகிமை

(காயத்ரீ மாத்ரஸாரோபிவரோவிப்ரோ நஸம்சய: என்று விதிப்படி செய்கிறகாயத்ரீஜப மாத்திரத்தால் நம் ஸர்வஸித்தியையும் அடையலாம் வஸிஷ்ட மஹரிஷிகாயத்ரீ பலத்தால் ப்ரும்ம தெண்டத்தைநட்டு ராஜாவாகயிருந்த விச்வாமித்ரரை யுத்தத்தில் ஜயித்தார். காயத்ரீ அக்ஷரங்களின் பலவிதமாறுதல்கள்தான் ப்ரும்மாஸ்த்ர ஆக்னேயாஸ்த்ரம் முதலான அஸ்த்ரங்களாக யிருக்கின்றன இந்த அஸ்திரங்களைக் கொண்டே ஸூர்ய சந்திரவம்சத்து ராஜாக்கள் தேவர்களுக்கு ஒத்தாசையாகயிருந்து அஸுர ராக்ஷஸர்களை ஜயித்தார்கள். காயத்ரீயின் அர்த்தமானது நாம் நினைத்த ஸித்திகளை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. காயத்ரீயின் 3-ம் பாதத்தில் (தியः—நः) என்ற 2 பதமும் பகுவசனமாகயிருப்பதால் ஸனாதனி ஸமூஹமாகிய எங்களுடைய புத்திகளை உலகத்தைப் படைத்த எந்த பரமாத்மா தூண்டுகிறானோ அந்தஸவிதாவினுடைய தேஜஸ்ஸை ரொம்பவும் மேன்மையாக த்யானம் செய்கிறேன் என்று காயத்ரீயின் அர்த்தமாகையால் ஸனாதனி ஸமூஹத்தின் பிரார்த்தனை எல்லாம் நிறைவேறும். ஆகையால் நகரங்களிலும் கிராமங்களிலும் எல்லோரையும் காயத்ரீ ஜபம் தினம் 108-க்கு குறையாமல் செய்யும்படியாக பிரசாரம் செய்தால் அதர்ம வேற்றுமையே ஏற்படாது. இக்கலியுகத்தில் ஏற்பட்டு வருகிற அதர்மங்களெல்லாம் கௌதம மஹரிஷியின் கடுமையான சாபத்தாலேயே தவிர வேறில்லை. காயத்ரீ ஜபத்தால் என்னுடைய சாபங்கள் நிவர்த்தியாகட்டுமென்று சாப விமோசனமும் சொல்லியிருக்கிறார். காயத்ரீயைப் பற்றி விஷயம் ஏராளமாயிருக்கிறது. ஸந்தர்பத்தை ஒட்டி சுருக்கி எழுதினேன். இதுநிற்க மைத்தபடி சிரத்தையுள்ளவர்கள் அக்னி ஹோத்ரம் அல்லது ஔபாஸனம் 6-ல் 2-வது புருஷ சூக்தபடனமாவது அல்லது பிரும்மயக்ஞம் 3 பஞ்சாயதன பூஜை 4 அதிதி ஸத்காரம் 5 வைச்வ தேவ ஹோமம் 6 இந்த 6-ம் எல்லோரும் செய்து வந்தால் ஷடி 5 வித வியாதி நிவர்த்தியடைந்து தேச க்ஷேமமும், செய்தவர்களுக்கு தர்ம அர்த்த காம மோக்ஷமென்ற 4 புருஷார்த்தமும் சித்திக்கும். சுபம்.

ப்ருஹதா 1 சு 3-வது பிராம்மணம் 7 8 வது மந்திரம் சொல்லியபடி ஷடி ஸ்னானாதி 3-க் காட்டிலும் ப்ராணாயாமமானது ம்ருத்யுவையும் ஜயித்து காயஸித்தி ஜீவன் முக்தியையும் கொடுக்கும்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.